# 23

# ஹதீஸ் வகைகள்

இஸ்லாத்தின் சட்ட மூலாதாரங்களுள் அல்குர்ஆனுக்கு அடுத்ததாக அல்ஹதீஸ் அமைந்துள்ளது. ஹதீஸ் என்ற அறபுப் பதம் 'புதியது', 'செய்தி' எனும் மொழிக் கருத்தைக் கொண்டுள்ளது. இஸ்லாமியப் பரிபாஷையில் நபி முஹம்மத் ஸ அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் உள்ளிட்ட, அவர்களது வாழ்வுடன் தொடர்பான விடயங்களை இப்பதம் குறிக்கின்றது.

ஹதீஸ்களுள் அல்-ஹதீஸ் அல்-குத்ஸி, அல்-ஹதீஸ் அன்-நபவி என பிரதான இரண்டு பிரிவுகள் உள்ளன. ''அல்லாஹ் கூறுகிறான்'' என்ற தொடருடன் ஆரம்பமாகும் ஹதீஸ்கள் ஹதீஸ்-குத்ஸி எனப்படும்.

ஹதீஸ் குத்ஸிக்கான உதாரணம்

அல்லாஹ்வின் தூதர் ஸ அவர்கள் கூறியதாக அபூதர் அல் கி..பாரி **வ** கூறினார்கள்: பெருமையும் கண்ணியமுமிக்க அல்லாஹ் கூறுகிறான்; ''என் அடியார்களே! மக்களுக்கு அநீதியிழப்பதை எனக்கு நானே தடைசெய்து இருக்கிறேன். அதை உங்களுக்கும் தடைசெய்திருக்கிறேன். எனவே நீங்கள் ஒருவருக்கொருவர் அநீதியிழைக்க வேண்டாம். (முஸ்லிம்)

ஹதீஸ் குத்ஸி தவிர்ந்த ஏனைய ஹதீஸ்கள் யாவும் அல்-ஹதீஸ் அந்நபவி எனப்படுகின்றன. ஹதீஸ் நபவீ நபி முஹம்மத் (ஸல்) அவர்களது முழு வாழ்கையையும் உள்ளடக்கியுள்ளது. நபியவர்கள் வாயால் மொழிந்தவை ''ஹதீஸ் கவ்லி'' என்றும் செய்து காட்டியவை ''ஹதீஸ் பிஅலி'' என்றும் பிறர் செய்தவற்றுக்கு அங்கிகாரம் வழங்கியவை ''ஹதீஸ் தக்ரீரி'' என்றும் அழைக்கப்படுகின்றன. இனி நாம் மேற்படி மூன்று வகை ஹதீஸ்களுக்கும் பொருத்தமான உதாரணங்களைக் கண்டுகொள்வோம்.

**ஹதீஸ் கவ்லி**

ரஸூல் ஸ அவர்கள் கூறியதாக அபூஹுறைரா ரலி அறிவிக்கின்றார்கள்

‘‘அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பியவர் பேசினால் நல்லதை (நன்மையை)ப் பேசட்டும். இன்றேல் மௌனம் சாதிக்கட்டும்’’ (புஹாரி-முஸலிம்).

**ஹதீஸ் பிஅலி**

ஆயிஷா ரலி அறிவிக்கின்றார்கள் ரஸூல் ஸ அவர்கள், தான் மரணிக்கும் வரை ரமழானின் இறுதிப் பத்தில் இஃதிகாப் இருந்துள்ளார்கள். (புஹாரி)

**ஹதீஸ் தக்ரீரி**

காலித் இப்னு வலீத் ரலி அவர்கள் அறிவிக்கிறார்கள்: ‘‘ஒருமுறை நபி ஸ அவர்களுக்கு உடும்புக் கறி பரிமாறப்பட்டது. ஆயினும் அன்னார் அதனை உட்கொள்ளவில்லை. இதனை அவதானித்த ஸஹாபாக்கள் உடும்பு மாமிசம் உண்பது ஹராமானதா? என நபி ஸ அவர்களை வினவினர். அதற்கு நபி ஸ அவர்கள் இது எமது ஊரில் இல்லாததால் இதனைச் சாப்பிடப் பிரியமில்லாதிருக்கின்றது என்றார்கள். (புஹாரி, முஸ்லிம்) இங்கு நபி ஸ அவர்கள் தான் சாப்பிடாதபோதும் பிறர் சாப்பிடுவதை அங்கீகரித்துள்ளார்கள்.

மேலும் நாம் இந்த வகுப்பில் ஹதீஸ்களோடு தொடர்புடைய, எமது வழக்கில் இருக்கின்ற சில பிரயோகங்களைப் பற்றிச் சிறிது அறிந்துகொள்வோம்.

**ஹதீஸ் முதவாதிர்**

ஸஹபாக்கள், தாபிஈன்களுள் அதிகமான அறிவிப்பாளர்களால் (ராவி) ரிவாயத் செய்யப்பட்ட ஹதீஸ்களை ‘ஹதீஸ் முதவாதிர்’ என்பர். இவை அல்-குர்ஆனுக்கு அடுத்த நிலையில் ஆதாரமாகக் கொள்ளப்படும்.

**ஹதீஸ் ஆஹாத்**

முதவாதிரான ஹதீஸ்களுக்குரிய விதிமுறைகளுக்கு உட்படாதவை ஆஹாத் எனப்படுகின்றன. ஹதீஸ் ஆஹாத் குறைந்த எண்ணிக்கையிலான ராவிகளால் அறிவிப்புச் செய்யப்பட்டவைகளாகும்.

ஆஹாதான ஹதீஸ்கள் எடுத்த எடுப்பிலேயே ஏற்றுக்கொள்ளப்படுபவைகளல்ல. இத்தகைய ஹதீஸ்களின் தராதரம் ஆழ்ந்த ஆய்வின் பின்னரே நிர்ணயம் செய்யப்படும். ஹதீஸ்களின் அறிவிப்பாளர் வரிசை (இஸ்னாத்) மற்றும் ஹதீஸின்

உள்ளடக்கம் (மதன்) என்ற இரண்டு பகுதிகளும் நன்கு ஆய்வு செய்யப்படும். இவற்றில் ஏற்கத்தக்க ஹதீஸ்களை மக்பூல் என்றும் ஏற்கப்படாதவை மர்தூத் என்றும் அழைக்கப்படும். ஹதீஸ் ஸஹீஹ், ஹதீஸ் ஹஸன் ஆகியவை மக்பூல் வகையைச் சார்கின்றன. ழஈப், மவ்லூ.ஃ. போன்றன மர்தூதுக்கு உதாரணங்களா கின்றன.

நம்பத் தகுந்த சரியான ஹதீஸ்கள், ‘‘ஹதீஸ் ஸஹீஹ்’’ எனப்படுகின்றன. இவற்றின் இஸ்னாத் உயர் பண்புகளைக் கொண்ட ராவிகளை உள்ளடக்கி யிருக்கும். இத்தகைய ஹதீஸ்களது ‘‘மதன்’’ (உள்ளடக்கம்) குறைகளற்றதாக அமைந்திருக்கும். ‘‘ஹஸன்’’ எனப்படும் ஹதீஸ்கள் ஸஹீஹுக்கு அடுத்த நிலையில் கணிக்கப்படுகின்றன. ஸஹீஹான ஹதீஸ்களின் ராவிகள் பூரணமான ஞாபக சக்தியைப் பெற்றிருக்க, ஹஸனான ஹதீஸ்களின் ராவிகள் ஒரு சிலரின் ஞாபக சக்தி குறைபாடுடையதாகக் காணப்படும். ராவிகளது நம்பகத் தன்மை யில் குறைபாடுடைய ஹதீஸ்களை ‘‘ழஈப்’’ (பலவீனமானவை) எனக் கூறுவோம். இத்தகைய ஹதீஸ்கள் சட்டவாக்கத்துக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. எனினும், அமல்களின் சிறப்புக்களைக் கூறுவதற்குப் பயன்படுத்தலாம். ‘‘மவ்ழூஆத்’’ எனப் படுபவை நபி ஸ அவர்கள் மீது போலியாக இட்டுக்கட்டப்பட்டவற்றைக் குறிக்கின் றன.



**பயிற்சி:**

1. ஹதீஸ் ஸஹீஹ் - ஹதீஸ் ஹஸன் இடையிலான வேறுபாடு யாது?
2. முதவாதிரான ஹதீஸுக்கான உதாரணம் ஒன்றைக் குறிப்பிடுக?
3. ஹதீஸ்களின் தராதரங்களை நிர்ணயம் செய்வதற்குமுன் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் அம்சங்கள் யாவை?
4. பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றுக்கு (✓) எனவும், பிழையானவற்றுக்கு (✗) எனவும் அடையாளமிடுக.

   i) ஆஹாதான ஹதீஸ்கள் அனைத்தும் மக்பூல் ஆகும் (   )

   ii) ஹதீஸின் உள்ளடக்கம் மதன் எனப்படுகிறது. (   )

   iii) ஹதீஸ் கிரந்தங்கள் ஸஹீஹ் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய இரண்டும் மட்டுமே. (   )

   iv) ஹதீஸ் அறிவிப்பாளர் (ராவி) அனைவரும் நம்பத்தக்கவர்களே. (   )